

சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். உடன் திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், துணைப் பொதுச் செயலாளர் மதிவதினி ஆகியோர் உள்ளனர்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல் திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், சட்டமன்ற கட்சித் தலைவர் சிந்தனைச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான எம்.எச். ஜவாஹிருல்லா, பொதுச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான அப்துல் சமது ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு. செல்வப்பெருந்தகை மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி மற்றும் நிருவாகிகள் ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு அகில இந்திய இரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவரும், தென்னக இரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான டாக்டர் ந.கண்ணையா மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

## பண்பட்ட ஆளுமையாகத் திகழ்ந்தவர்!

# திராவிட இயக்கக் கொள்கைகளைப் பரப்பியவர் முரசொலி செல்வம்!

### பிரின்ஸ் கஜேந்திர பாபு இரங்கல்!

சென்னை, அக். 12 - முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு பொதுப் பள்ளிக்கான மாநில மேடை அமைப்பின் பொதுச் செயலாளர் பு.பா-கஜேந்திர பாபு இரங்கல் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு:

மதிப்பிற்கும் மரியாதைக்குரிய முரசொலி செல்வம் அவர்கள் மறைந்த செய்தி பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

மிகுந்த பாசத்துடன் நடந்துக் கொள்ளக் கூடியவர்.

கோட்பாட்டில் தெளிவும், அரசியல் புரிதலும், அனுபவமுதிர்ச்சியும் பெற்ற பண்பட்ட ஆளுமையாக திகழ்ந்தவர்.

எதை, எப்படி வெளிப்படுத்த வேண்டும் என்பதில் மிகுந்த பக்குவம் பெற்றவராக திகழ்ந்தார்.

அவரைப் போன்ற ஆளுமைகள் இன்று அதிகம் தேவைப்படுகின்றனர். அவரின் இழப்பு மிகப் பெரும் இழப்பு.

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அய்யா முரசொலி செல்வம் அவர்களுக்கு எனது இதயபூர்வமான அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

வாழ்க அவர் புகழ்!

அவரின் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பொதுப் பள்ளிக்கான மாநில மேடை பொதுச் செயலாளர் பு. பா. பிரின்ஸ் கஜேந்திர பாபு தெரிவித்துள்ளார்.